

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 28.11.2024 | 48. 'ஜெபம்' நமது சுவாசம்! ஜெபமின்றி ஆத்ம உயிர் இல்லை! |
|---|---|



**மி**கப்பெரிய டால்பின் மீன்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் சுகமாய் வசிப்பதற்கு காரணம், குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் சமுத்திரத்தின் மேல் பரப்பில் துள்ளி துள்ளி குதித்து, தங்களுக்குத் தேவையான பிராண வாயுவை பெற்றுக்கொள்ளும் இரகசியமேயாகும். நாமும் இதைப்போலவே, நம் ஜெப ஜீவியத்தை ஆவிக்குரிய நிலைக்கு உயர்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாக நம் ஜெபத்தில் சுவாசிப்பதே தேவனுடைய ஜீவனிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆவியாகும்! அவருடைய ஆவியிலிருந்தே நாம் ஜீவனையும் சமாதானத்தையும், இந்த கேடான உலகத்திலேயே பெற்று அனுபவிக்கிறோம்!

ஒரு புதிதாய் பிறந்த குழந்தைக்கு 'உறிஞ்சி குடிப்பதை' யாரும் போதிக்க அவசியமில்லை. அதுதானாகவே தன் தாயின் மடியைச் சார்ந்து, தன் வளர்ச்சிக்குரிய தேவையான பாலை பெற்றுக்கொள்கிறது.

ஒரு அன்புள்ள தாய், தன் பிள்ளைக்கு தேவையான ஒரு நன்மையைகூட பதுக்கி வைப்பதில்லை. இருப்பினும், அந்த குழந்தை தன் தாயின் மடியில் பால் உண்ண முயற்சிக்காத பட்சத்தில், தன் உணவை பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்!

இதைப்போலவே, நம் ஜெப வேளையில், ''தேவனுடைய மடிக்கு'' நேராய் உயர்த்தி செல்லப்படுகிறோம்.

– ரத்னம்